**முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

Sc.No. 183/2023

நாள் 08.04.2025

(எதிரி ஆஜர். )

அ.த.சா. 14 திரு.மலைச்சாமி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார்.

அரசுத் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதன்மை விசாரணை தொடர்ச்சி (அனுமதியுடன்)

வழக்குச்சொத்துக்களான உருட்டுக்கட்டை–1, TN 65 AF 1573 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனம் – 1 ஆகியவற்றை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **படிவம் 95 ஆனது அ.த.சா.ஆ.16** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் புகார் என் ஆலோசனையின்பேரில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அங்கு வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், நான் சொன்னது போன்று மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை சாட்சிகளை இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகளாக விசாரித்து கொண்டுவரவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் விதத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும்,

பின்னிட்டு வழக்கிற்கு ஏதுவாக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. குற்ற மாறுதல் அறிக்கையில் எதிரியின் பெயரை தவறாக சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரியை கைது செய்த இடத்திற்கு அருகில் வீடுகள், கடைகள் மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. இருட்டுரணி பேருந்து நிறுத்தத்தில் இருந்து இராமநாதபுரம் போவதற்கும், தாமரைக்குளம் போவதற்கும், இருட்டுரணி போவதற்கும் Junction Point என்றால் சரிதான். அதனால் அங்கு பல ஊர்களுக்கு செல்வதற்காக ஆட்கள் நடமாட்டம் இருந்து கொண்டிருக்கும் என்றால் சரியல்ல. அந்த பேருந்து நிறுத்ததிற்கு அருகில் கடைகள் உள்ளதா என்றால் இல்லை. இருட்டுரணி பேருந்து நிறுத்தத்தில் இருந்து 500 மீட்டர் துாரத்தில் இருட்டுரணி கிராமம் உள்ளது. இருட்டுரணி கிராம மக்களை நான் எதிரியை கைது செய்து விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டி சாட்சிகளாக இருக்க யாரையும் அழைக்கவில்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் நான் இருட்டுரணி பேருந்து நிறுத்தம் சென்ற 10 நிமிடத்திற்குள் வந்துவிட்டனர். கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் இருட்டுரணி பேருந்து நிறுத்ததிற்கும் 500 மீட்டர் தொலைவு இருக்கும். கிராம நிர்வாக அலுவலரும், உதவியாளரும் வருவதற்கு முன்னரே நான் எதிரியை பிடித்து வைத்துக்கொண்டேன் என்றால் சரிதான். அவர்கள் வருவதற்கு முன்னரே நான் ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. அதே போன்று எதிரி நான் சொன்ன தேதி சொன்ன நேரம் சொன்ன விதத்தில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி அவர் வீட்டில் இருந்த போது, அவரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை நானே எழுதிக்கொண்டு அவரை கைது செய்தேன் என்றால் சரியல்ல.

நான் வழக்குச்சொத்தாக கைப்பற்றியது உருட்டுக்கட்டை ஆகும். அது சவுக்குக்கட்டை ஆகும். கம்புக்கும் கட்டைக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். கம்பு என்பது சுற்றளவு குறைவாகவும், உயரம் அதிகமாகவும் இருக்கும் என்றால் சரிதான். கட்டை என்பது சுற்றளவு அதிகமாகவும், உயரம் குறைவாகவும் இருக்கும் என்றால் சரியல்ல. நான் எனது புலன்விசாரணையில் கம்பு மற்றும் இருசக்கர வாகனத்தை கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது புலன்விசாரணையில் கம்பை கைப்பற்றியுள்ளேன் என்றும், தற்போது அதை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போன்று கம்பை கைப்பற்றினேன் என்றும், அதை நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. கட்டையால் அடித்தால்தான் இறந்தவருக்கு ஏற்பட்ட காயம் ஏற்படும் என்ற தோற்றத்தை காட்டுவதற்காக கட்டையை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லும் இருசக்கர வாகனத்தை எதிரியின் வீட்டில் இருந்து கொண்டுவந்துள்ளேன் என்றால் சரியல்ல. கட்டையை எங்கு வைத்து கைப்பற்றினேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றினேன்.

நான் சொன்னது போன்றுஎதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த பொருட்களையும் நான் அவரிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி, மாதிரி வரைபடம், படிவம் 95 ஆகியவை பின்னிட்டு வழக்கிற்கு ஏதுவாக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சாட்சி பால்பழனி என்பவரை நான் மிரட்டி பயமுறுத்தி சொல்லிக்கொடுத்து நீதிமன்றத்தில் 164 குவிமுச வாக்குமூலம் கொடுக்க வைத்தேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் 2ன் வாக்குமூலங்களை வீடியோ மற்றும் ஆடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது, அவ்வாறு வீடியோ மற்றும் ஆடியோா பதிவு செய்ய காவல்துறையிலேயே பயிற்சி பெற்ற Technicians உள்ளனர் என்றால் சரிதான். அந்த Technicians களை வைத்து அ.சா.1 மற்றும் 2 சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.8 கருணாமூர்த்தி போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளார் என்றால் சரிதான். அவர் ஸ்டியோ வைத்து நடத்த உரிமம் வைத்துள்ளாரா என்றால் வைத்துள்ளார். மேற்படி அ.சா.8 கருணாமூர்த்தி ஆடியோ மற்றும் வீடியோ பதிவு செய்வதற்கு முறையாக பயிற்சி பெற்றுள்ளார் என்பதை காண்பிக்கும் சான்றிதழ் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.8 கருணா மூர்த்தி என்பவர் போட்டோ ஸ்டுடியோ வைத்து நடத்த எந்த வித உரிமம் இல்லாதவர் என்றால் சரியல்ல. உரிமம் இல்லாமல் காவல் துறையின் தயவோடு போட்டோ ஸ்டுடியோ நடத்திவருகிறார் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர் முறையான உரிமம் இல்லாமல் ஸ்டுடியோ நடத்துவதால்தான், தவறாக வீடியோ ஆடியோ பதிவு செய்ததாக பொய்யாக அவரை விசாரித்ததாக 161 வாக்குமூலம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கு இசைப்பாடல்கள் மற்றும் சினிமா போகும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. சிடியை அ.சா.8 கருணாமூர்த்தியை வாங்கி வந்தார். அந்த சிடியை எந்த கடையில் வாங்கினார் என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சிடி வாங்கியதற்கான ரசீதுகளை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஒரு சிடியில் அனிதா சுமதி என்றும், மற்றொரு சிடியில் ராணி என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சிடியில் என்ன உள்ளது என்பதற்காக அதனை போட்டுப்பார்த்து, அது சம்மந்தமாக சாட்சிகளை ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 சாட்சிகளை, அ.சா.8 கருணாமூர்த்தி என்பவர் மூலம் ஆடியோ வீடியோ பதிவு செய்யும் போது அங்கிருந்த உள்ளூர் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யவில்லை என்றால்

சரியல்ல. நான் சமர்ப்பித்த சிடியில் யாருடைய குரல் உள்ளது என்பதை காட்ட குரல் மாதிரி பரிசோதனை நடத்தவில்லை என்றால் சரிதான். நான் சமர்ப்பித்துள்ள இரண்டு சிடியிலும் எந்த வீடியோவும் இல்லை, எந்த ஆடியோவும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கினை முறையாக புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று எந்த செல்போன்களையும் பெறவில்லை என்றாலும், பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. எனது புலன்விசாரணையில் இறந்த நபர் இறந்த சமயத்தில் குடிபோதையில் இருந்தார் என்று எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். இறந்துபோனவர் குடிபோதையில் தவறி, ஒரு கல்லில் மீது விழுந்துதான் இறந்தார் என்றால் சரியல்ல. எதிரியின் விரோதிகள் சொன்னதன் பேரில், நான் முறையாக விசாரிக்காமல், எதிரிக்கு எதிராக ஆவணங்களை காவல் நிலையத்தில் உற்பத்தி செய்துவிட்டு, எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி நான் சொன்னது போன்று எந்த குற்றச்சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை (அனுமதியுடன்)</u>

அ.சா.1 ராணி, அ.சா.2 அனிதா, அ.சா.3 சுமதி, அ.சா.4 ஆண்டி, ஆ.சா.5 செல்வராஜ், அ.சா.12 வீரையா, அ.சா.15 பால்பழனி ஆகியோர் என்னிடம் விவரத்தைத்தான் நான் 161 குவிமுச வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .